## தரம் 11

# தமிழ் மொழியும் இலக்கியமும்




### அலகு 11
### சங்கப்பாடல்கள்
### குறுந்தொகை

Mr M.Selvathas MA in Tamil
NP/J/Thevaraiyali Hindu
College,Karaveddy.

# குறுந்தொகை




## குறுந்தொகை

# குறுந்தொகை

நுழைவாயில்

- சங்ககாலத்தில் தோற்றம்பெற்ற எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
- குறுகிய அடிகளைக்கொண்ட செய்யுள்களின் தொகுப்பு
- நான்கு அடி முதல் எட்டு அடிவரை கொண்ட பாடல்கள் இதில் காணப்படுகின்றன



அகத்திணைப் பாடல்களின் தொகுப்பு

# பாடல் தொடர்பான அறிமுகம்









## 01. பல்தேர்வு வினாக்கள்

**மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

"**தச்சன்** செய்த சிறுமா வையம்" இங்கு தச்சன் என்பதன்எதிர்ப்பாற் சொல்

- தச்சி
- தச்சள்
- தச்சிச்சி
- தச்சினி

**“நற்றேர்ப் பொய்கை ஊரன் கேண்மை செய்து இன்புற்றெனம்” இங்கு கேண்மை என்பதன் ஒத்த பதம்**

- பகைமை
- இன்பம்
- உறவு
- நட்பு

"தச்சன் செய்த சிறுமா **வையம்**..." இங்கு வையம் என்பதன் பொருள்

உலகம்

தேர்

சிறிய

குதிரை

"**பொய்கை** ஊரன் கேண்மை செய்து இன்புற்றெனம்"
இங்கு பொய்கை என்பதன் ஒத்த பதம்

- கடல்
- ஆறு
- நதி
- குளம்

“பொய்கை ஊரன் கேண்மை செய்து இன்புற்றெனம் **செறிந்தன** வளையே..” இங்கு செறிவு என்பதன் எதிர்ப்பதம்

நெருக்கம்

இறுக்கம்

தளர்வு

விரிசல்

**02. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.**

1. குறுந்தொகை சங்க இலக்கியங்களில் ஒன்று ( சரி )
2. குறுந்தொகைச் செய்யுட்கள் அடியளவில் நீண்டன (பிழை)
3. 'தச்சன் செய்த சிறுமா வையம்' எனும் குறுந்தொகைச் செய்யுளின் ஆசிரியர் தும்பிசேர் கீரன் ( சரி )
4. 'தச்சன் செய்த சிறுமா வையம்' எனும் குறுந்தொகைச் செய்யுள் நெய்தல் நிலத்திற்குரியது (பிழை)
5. குறுந்தொகை போர் பற்றிப் பாடுகின்றது (பிழை)

6. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுளின் துறை கையறுநிலை என்பதாகும் **(பிழை)**

7. மருத நிலத்திற்குரிய காதல் ஒழுக்கம் ஊடலாகும் **(சரி )**

8. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுள் தலைவனின் துயரைப் பாடுகின்றது **(பிழை)**

9. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுள் தோழி கூற்றாக அமையப்பெற்றுள்ளது **(சரி )**

10. அகம் என்பது காதலைக் குறிக்கின்றது **(சரி )**

**கூற்றுக்களில் ‘பிழை’ என்பதற்குரிய சரியான விடைகள்**

2.குறுந்தொகைச் செய்யுட்கள் அடியளவில் நீண்டன

4. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுள் நெய்தல் நிலத்திற்குரியது

5. குறுந்தொகை போர் பற்றிப் பாடுகின்றது

6. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுளின் துறை கையறுநிலை என்பதாகும்

8. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’ எனும் குறுந்தொகைச் செய்யுள் தலைவனின் துயரைப் பாடுகின்றது



**03. மிகப்பொருத்தமான விடையினை இனங்கண்டு இணைக்குக.**

| | |
|---|---|
| 1. மா | 1. நட்பு |
| 2. வையம் | 2. வயலும் வயல்சார்ந்த இடமும் |
| 3. ஊர்ந்து | 3. சிறுவர்கள் |
| 4. ஈர்த்து | 4. வளையல் |
| 5. உற்று | 5. குதிரை |
| 6. கேண்மை | 6. தலைவன் |
| 7. வளை | 7. செலுத்தி |
| 8. மருதம் | 8. தழுவி |
| 9. தலைமகன் | 9. இழுத்து |
| 10. இளையோர் | 10. தேர் |

## 04. சுருக்கமான விடை எழுதுக.




1. குறுந்தொகை எனும் பெயருக்குரிய காரணம் யாது ?

   குறுகிய அடிகளைக் கொண்ட பாடல்களின் தொகுப்பு என்பதால் குறுந்தொகையாயிற்று

2. தச்சன் செய்த சிறுமா எனும் குறுந்தொகைச் செய்யுளின் துறை யாது ?

   தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது

3. தச்சன் செய்த சிறுமா எனும் குறுந்தொகைச் செய்யுளில் இடம்பெற்றுள்ள அணி யாது ?

   உவமையணி

4. தலைவியின் கைவளையல்கள் இறுக்கமாக இருந்தமைக்கு காரணம் யாது ?

தலைவனின் நினைவோடு அவள் இருந்ததனால் கைவளையல்கள் இறுகியிருந்தன

5. “நற்றேர்ப் பொய்கையூரன் கேண்மை” என்பதனை சந்திபிரித்து எழுதுக ?

நல் **+** தேர் + பொய்கை + ஊரன் + கேண்மை

**செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமையணி தொடர்பான விளக்கம்**

**தச்சன் செய்த சிறுமா வையம் ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின் ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்..........**

**உவமானம் : கைவண்டியை ஏறிச்செலுத்தி இன்பமடையாவிட்டாலும் கையினால் இழுத்து இன்பமடையும் சிறுவர்கள்**

**உவமேயம் : தலைவனின் நினைவினூடே இன்பமடையும் தலைவி**

**பொதுத்தன்மை : ஒன்றின் மூலம் கிடைக்கும் இன்பத்தை வேறு ஒன்றினால் பெற்று இன்பமடைதல்**

## குறுந்தொகையை மையமாகக் கொண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் இடம்பெறுகின்ற வினாக்கள்

### வினா வகை I
### பல்தேர்வு வினாக்கள்

01.“நற்றேர்ப் பொய்கை ஊரன் **கேண்மை** செய்து இன்புற்றெனம்” இங்கு கேண்மை என்பதன் எதிர்ப்பதம்

1.பகைமை 2.இன்பம்

3.நட்பு 4.உறவு

02.“தச்சன் செய்த சிறுமா வையம்...” இங்கு சிறுமா என்பதன் பொருள்

1.மாமரம் 2.குதிரை

3.சிறியகுதிரை 4.உலகம்



## வினா வகை II –குறுவினாக்கள்

1. தச்சன் செய்த சிறுமா எனும் குறுந்தொகைச் செய்யுளின் துறை யாது ?

   தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது

2. தச்சன் செய்த சிறுமா எனும் குறுந்தொகைச் செய்யுளின் திணை,ஒழுக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடுக ?

   திணை – மருதம்
   ஒழுக்கம் - ஊடல்

3 தச்சன் செய்த சிறுமா எனும் குறுந்தொகைச் செய்யுளைப் பாடியவர் யார் ?

   தும்பிசேர்கீன்

**வினா வகை III**

**பின்வரும் செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்
உற்று இன்புறோம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றெனம் செறிந்தன வளையே

அ. இப்பாடலின் மையக்கருத்து யாது ?

ஆ. இப்பாடலில் தலைவன் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளான்?

அ. தலைவனோடு தலைவி இருந்தபோது பெற்ற இன்பத்தை அவன் இல்லாத போது நினைவினூடே பெறமுடிந்த தலைவியின் நிலை

ஆ. - நல்ல தேரினை உடையவன்
- பொய்கையினை உடைய நாட்டின் தலைவன்

வினா வகை IV
தொகுப்பு வினாக்கள்


1. குறுந்தொகையில் தலைவனின் பிரிவால் தலைவியடைந்த நிலைபற்றிய தோழியின் கூற்று பற்றி கருத்துரைக்குக.

தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டப்பட்ட சிறிய தேரினை ஏறிச்செலுத்தி இன்பமடையாவிட்டாலும் அதனை கைகளாலே இழுத்து இன்பமடையும் சிறுவர்களைப் போல – நல்ல தேரினையும் பொய்கையையும் உடைய ஊர்த்தலைவனோடு தழுவி இன்பமடையாவிட்டாலும்

அவ் ஊர்த்தலைவனது நட்பினை மனதிலிருத்தி மேலும் மேலும் பெருகச்செய்து இன்பமடைந்தோம் அதாவது தலைவன் தலைவியோடு இருக்கும்போது பெற்ற இன்பத்தை அவன் இல்லாத போது அவன் நினைவால் தலைவியால் பெறமுடிந்தது. அதனால் தலைவியின் கை வளையல்கள் கழராமல் இறுகி அமைந்துள்ளன. இனிமேல் தலைவன் இங்கு வந்து செய்யக்கூடியது எதுவுமில்லை என்பதனை தோழி தன் கூற்றுக்களினூடே எடுத்துக்கூறியுள்ளாள். இதன் மூலம் தலைவனின் நன்றி மறந்த நிலையும் தலைவியின் நன்றிமறவா நிலையும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.


சங்க இலக்கியம் – எட்டுத்தொகை
குறுந்தொகை
மூலமும் உரையும்
உரையாசிரியர்
புலியூர்க் கேசிகன்
சாரதா பதிப்பகம்


குறுந்தொகை


குறுந்தொகை
மூலமும் உரையும்
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம்



# நன்றி

